NEETHIDEVADHAI MONTHLY MAGAZINE

# நீதிதேவதை

தமிழ் மாத இதழ்

www.neethidevadhai.com

ஆண்டு - 11 இதழ்-9 அக்டோபர் -2023 விலை ரூ.12/-

Volume - 11 Issue -9 October -2023 Price Rs.12/-



## தமிழகத்தில் அரசியல் களம் மாறுமா?

# அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி

அறிவாயுதம் ஏந்துவோம்



## கருத்தாக்கங்கள்

1. சமூக நீதி என்பது சமூக அறன்
2. மறுமலர்ச்சி புரட்சியில் உள்ளடக்கங்கள்
   - அ. பசுமை புரட்சி
   - ஆ. வெண்மை புரட்சி
   - இ. தொழில் புரட்சி
   - ஈ . கல்வி புரட்சி மற்றும்
   - உ. பொருளாதார புரட்சி
3. அறம் சார்ந்த புரட்சி என்பது
   அறிவாயுதம் ஏந்திய புரட்சி
   சமூக நீதியை நிலைநாட்ட என்றும்
   புரட்சி செய்வோம் அறவழியில்
4. அதிகம் பயணிக்காத பாதைகளில்
   செல்லும் துணிவை வளர்த்தெடுங்கள்
   அதுதான் உண்மையான தலைமை
   பண்பு
5. எதையும் கற்றுக்காண்டு நாம்
   பிறக்கவில்லை கற்றுக்கொள்ளவே
   பிறந்திருக்கிறோம்.

# நீதிதேவதை

பல்துறை மாத இதழ்

C.சரவணன்.M.A.B.L.,ஆசிரியர்/வெளியீட்டாளர்
S.அரவிந்த்.BBA.LLB., செய்தி ஆசிரியர்
M.மீனாட்சிசுந்தரம்.M.A.B.Lit.,இணைஆசிரியர்
S.நரேஷ்குமார்.D.H.M.C.T., துணைஆசிரியர்
A.ஜெயந்த் உதவி ஆசிரியர்

I.ஞானமணி தலைமை நிருபர்

மாவட்ட நிருபர்கள்
P.முருகானந்தம் திருவள்ளூர்
A.அசோக்குமார்.B.A.LLB.,திருவண்ணாமலை
S.பிரதீப் கோயம்புத்தூர்
P.மாரிமுத்து திருநெல்வேலி
V.சென்னகிருஷ்ணன் தருமபுரி
M.கண்ணன் திருப்பூர்
S.முருகேசன் ஈரோடு
S.கமலக்கண்ணன் செங்கல்பட்டு
S.சரவணன் கள்ளக்குறிச்சி
G.கார்த்திக் வேலூர்
M.முருகேசன் திண்டுகல்
P.L.காளிதாஸ் சிவகங்கை
V.முத்துபாண்டி தேனி
G.ரமேஷ்குமார் மதுரை
G.சிவகுமார் தூத்துக்குடி
P.R.S.திரவியகண்ணன் தென்காசி


நிருபர்கள்
D.சுந்தர்ராஜன்.B.COM.B.L.,
S.வெங்கடகிருஷ்ணன்
S.முத்தையன்
R.குருமூர்த்தி

J.சண்முகம் புகைப்பட கலைஞர்

P.ஜெகதீஸ்வரன்.B.A.B.L.,
சட்ட ஆலோசகர், சென்னை உயர்நீதிமன்றம்

வடிவமைப்பு: ஆதவன் கிராஃபிக்ஸ்
---------------------------
தொடர்புக்கு : 9884956002
e.mail.neethidevadhai@rediffmail.com
website: www.neethidevadhai.com


# அக்டோபர் 15 அப்துல்கலாம் 92வது பிறந்த நாள்



**நாம் அனைவருக்கும்
ஒரே மாதிரி திறமை
இல்லாமல் இருக்கலாம்.
ஆனால்,
அனைவருக்கும் திறமையை
வளர்த்துக் கொள்ள ஒரே
மாதிரி வாய்ப்புகள்
உள்ளன.
நம்பிக்கை நிறைந்த ஒருவர்
யார் முன்னேயும்,
எப்போதுமே மண்டியிடுவது இல்லை.**

**-அப்துல்கலாம்**


**நிருபர்கள் தேவை**

எங்கள் நீதிதேவதை மாத இதழுக்கு மாவட்டம், ஒன்றியம், தாலுகா, வாரியாக துடிப்பான நிருபர்கள் தேவை.

பகுதி நேரமாகவும் பணியாற்றலாம்.

முழு விபரங்கள் அனுப்பவும்.

வாட்சப் எண் : 9884956002

e.mail: neethidevadhai@rediffmail.com

# உடல் உறுப்பு தானம் செய்தோர் இறந்தால் அவரது உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும். மு.க ஸ்டாலின்






உடல் உறுப்பு தானம் செய்தோர் இறந்தால் அவரது உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படும். மு.க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உடல் உறுப்பு தானத்தின் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு வாழ்வளிக்கும் அரும்பணியில் நாட்டின் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு தொடர்ந்து விளங்கி வருகின்றது. குடும்ப உறுப்பினர்கள் மூளைச்சாவு நிலையை அடைந்த துயரச் சூழலிலும், அவர்களின் உடல் உறுப்புகளைத் தானமாக அளித்திட முன்வரும் குடும்பங்களின் தன்னலமற்ற தியாகங்களால்தான் இந்தச் சாதனை சாத்தியமாகியுள்ளது. தம் உறுப்புகளை ஈந்து, பல உயிர்களைக் காப்போரின் தியாகத்தினைப் போற்றிடும் வகையில், இறக்கும் முன் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச்சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

# திமுகவின் கனவை கலைத்த அதிமுகபாஜக பிரிவு: தமிழகத்தின் அரசியல் களம் மாறுமா?

மக்களவைத் தேர்தலில் தொகுதி உடன்பாட்டை தனக்கு சாதகமாக்க நினைத்த திமுகவின் கனவை, அதிமுக பாஜக பிரிவு கலைத்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் விமர்சிக்கின்றனர்.

மக்களவைத் தேர்தல் அறிவிப்பை நாடு முழுவதும் உள்ள அரசியல் கட்சிகள் எதிர்நோக்கியுள்ளன. பாஜகவை வீழ்த்தியாக வேண்டும் என்ற நோக்கில், திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இணைந்து 'இண்டியா' கூட்டணியை உருவாக்கி, தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றன.

அதேநேரத்தில், 5 மாநில தேர்தல்களில் தனது இருப்பை நிலைநிறுத்தும் பணிகளில் பாஜக ஈடுபட்டுள்ளது. கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான அமித்ஷா, 5 மாநில தேர்தலுடன், மக்களவைத் தேர்தலுக்கும் சேர்த்து கட்சியின் நிலைப்பாடுகளை உருவாக்கி வருகிறார்.

இதற்கிடையில், தமிழகத்தின் அரசியல் களம் தற்போது தலைகீழாக மாறியுள்ளது. 2019 மக்களவைத் தேர்தலில் தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளில் திமுக, அதிமுக கூட்டணி தவிர்த்து, அமமுக, நாம் தமிழர், மக்கள் நீதி மய்யம் தனித்தனியாகப் போட்டியிட்டன.

திமுக கூட்டணியில் திமுக நேரடியாக 20 தொகுதிகளிலும், காங்கிரஸ் 10, மார்க்சிஸ்ட் கம்யூ., இந்திய கம்யூ., விசிக ஆகியவை தலா 2, மதிமுக, கொமதேக, ஐயுஎம்எல், ஐஜேகே தலா 1 தொகுதிகளில் போட்டியிட்டன. அதேபோல, அதிமுக கூட்டணியில் அதிமுக 20, பாமக 7, பாஜக 5, தேமுதிக 4, புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சி, தமாகா, புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் ஆகியவை தலா 1 தொகுதிகளிலும் போட்டியிட்டன.

2024 மக்களவைத் தேர்தலிலும் இதே கூட்டணி வியூகத்துடன் இரு கட்சிகளும் களமிறங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதை முன்னிறுத்தி திமுக சார்பில் இண்டியா கூட்டணிக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

தலைகீழ் மாற்றம்: அதிமுகவைப் பொறுத்தவரை கட்சித் தலைவர்கள் மத்தியில் சிறு சிறு கருத்து மோதல்கள்

இருந்தாலும், பாஜக உள்ளிட்ட கட்சிகளுடன்தான் கூட்டணி என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதிமுகபாஜக கூட்டணியில் ஏற்பட்ட விரிசல், தமிழக அரசியல் களத்தை தலைகீழாக மாற்றியுள்ளது. பிரிந்த இரு கட்சிகளும் புதிய கூட்டணிகளை எதிர்பார்க்கும் நிலையில், திமுகவின் கனவு கலைந்து, நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியாகும்போது, பெரும்பான்மையில் சிக்கல் உருவானால்,அதிக எம்.பி.க்களுடன் தனக்கான இடத்தை உறுதி செய்ய வேண்டும் என்பது திமுகவின் எதிர்பார்ப்பு. ஆனால், தற்போதைய அரசியல் சூழலால், தொகுதிப் பங்கீட்டில், கூடுதல் இடங்களை விட்டுக் கொடுக்கும் நிலை திமுகவுக்கு ஏற்பட்டுள்ளது.

திமுகவைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் **25** தொகுதிகளில் தனது கட்சியினரை நிறுத்திவிட்டு, காங்கிரஸுக்கு **5** அல்லது **7** தொகுதிகளைத் தந்து, இதர கட்சிகளுக்கு ஒன்று அல்லது **2** தொகுதிகளை வழங்கும் திட்டத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த சூழலில், அதிமுக தற்போது பாஜகவை வெளியேற்றிவிட்டு, புதிய கூட்டணியை உருவாக்க முயற்சித்து வருகிறது. அதேபோல, அதிமுகவை தவிர்த்து, இதர கட்சிகளை சேர்த்து புதிய கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் பாஜக ஈடுபட்டுள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலைவிட காங்கிரஸ் கூடுதலாக **5** தொகுதிகளையும், இதர கட்சிகள் கூடுதலாக ஒன்றிரண்டு தொகுதிகளையும் கேட்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதிமுகபாஜக கூட்டணி முறிவு, இந்தக் கட்சிகள் தங்கள் தேவையை கேட்டுப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதிமுகபாஜக கூட்டணி முறிவை விமர்சிக்கும் திமுக கூட்டணிக் கட்சிகளில் சில, தங்களின் கூட்டணி தொடர்பாக மவுனம் சாதித்து வருகின்றன. இது திமுகவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

திமுகவுடன் மநீம கூட்டணி: இதைத் தவிர்க்கவே, அதிமுக பாஜக கூட்டணி முறிவு என்பது நாடகம் என்று திமுக தலைவர்கள் பேசி வருவதாகக் கூறப்படுகிறது.

திமுக கூட்டணியில் இருந்து ஐஜேகே விலகிய நிலையில், மக்கள் நீதி மய்யம் கூட்டணியில் இணைய வாய்ப்பு உள்ளதாகவும், அப்போது மநீம கூடுதல் இடங்களைக் கேட்கும் என்றும் தெரிகிறது.

இந்நிலையில், கூட்டணிக் கட்சிகளுடன் தற்போதைய நிலை குறித்துப் பேச திமுக தலைமை முடிவெடுத்துள்ளது. இதற்காக விரைவில் மூத்த நிர்வாகிகள் கொண்ட குழு அமைக்கப்பட உள்ளதாக திமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

# தினத்தந்தி அதிபருக்கு புகழ் அஞ்சலி



தினத்தந்தி அதிபர் டாக்டர் **பா.சிவந்திஆதித்தனார்** பிறந்த நாளை ஒட்டி சென்னை போயஸ் கார்டனில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் வர்த்தகர் பிரிவு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தலைவர் V.L.C.ரவி, தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் ஜெ.முத்து ரமேஷ் ஆகியோர் அய்யாவின் திருஉருவ படத்துக்கு மாலை அணிவித்து வணங்கினார்கள்,

# திருப்பூர் செய்திகள்

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.C.மகேந்திரன் M.A.,M-LA அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.33 லட்சம் மதிப்பில் கணக்கம்பாளையம் மற்றும் கண்ணமநாயக்கனூர் ஊராட்சிகளில் நியாய விலை கடை, உயர்மட்ட நீர் தேக்க தொட்டி மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

-சாம்சங்













திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பெரிய வாளவாடி வடபூதிநத்தம், ராகுல்பாவி, ஆகிய ஊராட்சிகளில், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினரும், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான மாண்புமிகு C. மகேந்திரன் M.A.,MLA அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ.10.41 லட்சம் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், சுமார் ரூ 67.65 லட்சம் மதிப்பிலான புதிய பணிகளை பூமி பூஜை செய்து அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் உடுமலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் செழியன், மாவட்ட பாசறை செயலாளர் காமாட்சி சுந்தரம், ஊராட்சி மன்ற தலைவர்கள் பெரிய வாளவாடி தேவராஜ், இராகல்பாவி சுமதி செழியன், ஆர். வேலூர் அன்னலட்சுமி ஜெய் கிருஷ்ணன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் மோகன்ராஜ், விமலா, ராசாத்தி, மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் மாணாக்கர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளான கலந்து கொண்டனர்.

-சாம்சங்

# ஆசிரியர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது




உடுமலை கிழக்கு ஒன்றியம் எலையமுத்தூர் ஊராட்சியில் உள்ள SNV மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் எலையமுத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் இ.கே மாரிமுத்து அவர்கள் தலைமையில், ஒன்றிய குழு உறுப்பினர் தங்கமணி ஜெய்பிரகாஷ் அவர்கள் முன்னிலையில், சிறப்பு விருந்தினர்களாக உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ். கே. மெய்ஞானமூர்த்தி ஆகியவர்களும் மடத்துக்குளம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஈஸ்வரசாமி அவர்களும், சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்ட அரிமா சிவராஜ் அவர்களும், தென்றல் ஆ. சேகர் அவர்களும் பெரிய கோட்டை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்களும், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் விக்னேஷ் அவர்களும், எலையமுத்தூர் கந்தர்மணி அவர்களும், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகளும், ஆசிரியர்களும், பொதுமக்களும், மடத்துக்குளம் சக்சஸ் காஜா மைதீன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆசிரிய பெருமக்களுக்கு வாழ்த்துக்களை கூறி குழந்தை செல்வங்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது.

–சாம்சங்

# திருப்பூர் மாவட்டம் உடுமலை நகராட்சியின் அறிவிப்பு!








உடுமலை நகர்வாழ் மக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தற்பொழுது நோய் பரவலாக பரவி வரும் நிப்பா வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நகராட்சி சுகாதார பிரிவும் டி பி சி பிரிவும் இணைந்து வீடு வீடாக சென்று மேற்கொண்டு வருகிறார்கள். மழை நீர் வடிகால்கள் வீதிகளில் உள்ள பள்ளங்கள், குடிநீர் தொட்டி உபயோகப்படுத்தாமல் வெளியில் உள்ள ஆட்டாங் கல், டயர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் ஃப்ரிட்ஜ் பின்புறம் உள்ள தட்டில், பூந்தொட்டிகள், ஆகியவைகளில் தேங்கியுள்ள நீரில் உருவாகியுள்ள புழுக்கள் முழுமையாக அழிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. அவர்களின் பணி சுமையை எளிதாக்கும் விதமாக நோய் பரவல் உருவாகாமல் தடுக்கும் விதமாகவும் நாமே முன்வந்து மேலே குறிப்பிட்டதை போல் நம்முடைய வீடுகளில் இருந்தால் அதனை உடனடியாக அப்புறப்படுத்துமாறு, மேற்கண்ட புழுக்கள் சாக்கடை நீரில் உருவாகாது மாறாக தூய்மையாக நீரிலே உருவாகும் தன்மை உள்ளதால் சேமித்து வைக்கும் குடிநீரினை இறுக்கமாக மூடி வைக்குமாறு, குடிநீரை காட்சி குடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் இல்லங்களில் உள்ள மேற்கூறிய இடங்களில் புழுக்கள் புழுக்கள் உருவாகி இருந்தால் உடனடியாக நகராட்சி சுகாதாரப் பிரிவிற்கு தொடர்பு கொண்டு, அல்லது தங்களின் நகர மன்ற உறுப்பினர் மூலமாக தொடர்பு கொண்டு அதற்குரிய மருந்தினை தெளிக்க உறுதி செய்யுங்கள். வருமுன் காப்போம். தகவல் மு. மத்தின், நகர மன்ற தலைவர். உடுமலைப்பேட்டை நகராட்சி.

# கோவை மையகோாரிய செயற்பொறியாளருக்கு அபராதம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவு தமிழ்நாடு தகவல் ஆணையம் அதிரடி

கோவை மையகோட்ட மின்வாரிய செயற்பொறியாளருக்கு அபராதம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் உத்தரவு தமிழ்நாடு தகவல் ஆணையம் அதிரடி

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் வசிக்கும் விஜயலட்சுமி என்பவர் கோவை மாநகர் வட்டம் மைய கோட்ட செயற்பொறியாளராக இருப்பவர் துரைசாமி மீது தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அம்மனுவில் தனக்கு கோவை மா.ந.க. வீதியில் உள்ள கட்டிடத்திற்கு இரண்டு மின் இணைப்புகள் இருந்ததாகவும், அதனை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி மின் இணைப்பு துண்டிப்பு செய்து மீட்டர் அகற்றப்பட்டதாகவும், தெரிவித்திருந்தார்.

மின் துண்டிப்பு செய்து மீட்டர் அகற்றப்பட்டது தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோவை மாநகர் வட்டம் மையக்கோட்ட பொது தகவல் அலுவலரும் செயற்பொறியாளருமான துரைசாமி அவர்களிடம் மனு அளித்திருந்தார்.

ஆனால் தான் கேட்ட தகவல்களை அளிக்க மறுத்தார் என்றும் இதனால் இரண்டாம் மேல்முறையீட்டு அலுவலரான மாநகர் வட்ட மேற்பார்வை பொறியாளர் நக்கீரன் அவர்களிடம் மனு அளித்ததாகவும், ஆனாலும் தான் கேட்ட தகவல்களை மேல் முறையீட்டாளரும் அளிக்க மறுத்துவிட்டார்.

இதனால் பாதிக்கப்பட்ட விஜயலட்சுமி தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தான் கோரிய தகவல்களை முழுமையாக அளிக்க மறுத்ததால் இவர்கள் மீது அபராதம் விதிக்கவும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட கோரியும் மேலும் தான் கேட்ட தகவல்களை மற்றும் நகல்கள் அளிக்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

ம னு வை வ விசாரித்த மாநில தகவல் ஆணையர் மு. ஸ்ரீதர் கோவை மாநகர் வட்டம் மையக்கோட்ட பொது தகவல் அலுவலரும் செயற்பொறியாளர் துரைசாமியை நேரில் ஆஜராக மாறு உத்தரவிட்டிருந்தார்.அதன்படி மனுதாரரும் செயற்பொறியாளர் துரைசாமியும் நேரில் ஆ ஜ ஜராகினர். அப்போது இரு தரப்பு வாதங்களையும் கேட்ட ஆணையர், விஜயலட்சுமி கேட்ட தகவல்களை அளிக்க மறுத்ததுடன் நேரில் பார்வையிட்டு கொள்ள கூறியது தவறு என்றும் மேலும் மனுதாரரை ஒன்றரை ஆண்டுகளாக அலைகழிப்பு செய்ததுடன் மனுவில் கேட்ட தகவல்களை அளிக்க மறுத்த செயற்பொறியாளர் துரைசாமி மீது கோவை மண்டல தலைமை பொறியாளர் விசாரணை செய்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மனுதாரர் விஜயலட்சுமிக்கு பொது தகவல் அலுவலரும் செயற்பொறியாளருமான துரைசாமி இழப்பீடாக 10000 ரூபாய் அளிக்க வேண்டும். தலைமை பொறியாளர் செயற்பொறியாளர் மீது விசாரணை செய்து துறை நடவடிக்கை எடுத்து தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

கோவை மண்டல மின்வாரிய அலுவலகத்தில் உள்ள பொது தகவல் அலுவலர்கள் பெரும்பாலும் மனுதாரர்களுக்கு முறையான தகவலை அளிக்காமலும் காலதாமதம் செய்வது வாடிக்கையாக உள்ளது என்றும் இதனால் மனுதாரர்கள் சென்னை தமிழ்நாடு தகவல் ஆணையம் வரை சென்று வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற வேண்டிய நிலையில் உள்ளது இதனால் மனுதாரருக்கு வீண் அலைச்சலும் பொருளாதார இழப்பும் ஏற்படுகிறது. இந்த நிலையில் இது போன்ற அபராதம் விதித்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உத்தரவு வரவேற்கத்தக்கது.

-கோவை பிரதீப்

**விளம்பரம் கட்டணம்**

**வாசகர் பெருமக்களே! தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களுக்கும் சென்று கொண்டிருக்கும் நமது இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.**

**பின் பக்கம் அட்டை - 15,000 உள் பக்கம் அட்டை - 10,000**

**B&W முழு பக்கம் - 5,000 B&W அரைபக்கம் - 2500**



# குடிமகன்களின் கூடாரமாக மாறிப்போன பாண்டியன் நகர் நிழல் குடை

குடிமகன்களின் கூடாரமாக மாறிப்போன பாண்டியன் நகர் நிழல் குடை மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூரிலிருந்து பெருமாநல்லூர் செல்லும் சாலையில் திருமுருகன் பூண்டி புறக்காவல் நிலையம் எதிரே பாண்டியன் நகர் பேருந்து நிறுத்தம் உள்ளது.

இங்கே பேருந்தில் செல்ல இருக்கும் பயணிகளுக்காக நிழல் குடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இந்த நிழல் குடையின் உள்ளே இரவு மற்றும் பகல் நேரங்களில் நிறைந்த மதுபோதையில் குடிமகன்கள் எப்போதும் படுத்து கிடப்பது வாடிக்கையாக உள்ளது. பேருந்துக்காக குழந்தைகளுடன் வரும் பெண்களும் வயதான முதியவர்கள் நிழல்குடையின் உள்ளே சென்று அமர்வதற்கு வழியின்றி குடுமகன்கள் படுத்துக்கிடப்பதால் பயணிகள் அனைவரும் நிழல்குடையின் வெளியில் நின்று தான் பேருந்திற்காக காத்திருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இந்த பாண்டியன் நகர் பஸ் ஸ்டாப் எதிரிலேயே காவல் நிலையம் இருந்தாலும் குடிமகன்களை

பற்றி எவரும் கண்டுகொள்வதே இல்லை.

இரவு நேரத்தில் வேலைக்கு சென்று வீடு திரும்பும் இளம்பெண்கள் இப்பகுதியில் பேருந்திற்காக தனியாக நிற்கவே அச்சப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாநகராட்சியின் சார்பில் சாலையோரம் வசிப்பவர்களுக்கான இலவச தங்கும் விடுதிகள் இருந்தும் 24 மணி நேரமும் குடிபோதையில் இருப்பவர்கள் இது போன்ற பஸ் ஸ்டாப்களை மது அருந்தும் இடமாக பயன்படுத்தி வருகின்றனர். இதுபோல் பெண்களையும், முதியவர்களையும் அச்சுறுத்தும் விதமாக பொது இடங்களில் குடி போதையில் உறங்குபவர்களை மீட்டு ஆதரவற்றோர் தங்கும் விடுதிகளில் தங்க வைத்து அவர்களை குடிப்பழக்கத்திலிருந்து மீட்டெடுக்க கவுன்சிலிங் வழங்க மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இந்தியாவில் 74 லட்சம் வாட்ஸ் ஆப் கணக்குகள் முடக்கம்..?

இன்றைக்கு உலக அளவில் பலகோடி பயனாளர்களை கொண்ட வாட்ஸ்அப் நிறுவனம், கடந்த ஆகஸ்ட் மாதம் மட்டும் இந்தியாவில் உள்ள 74.2 லட்சம் வாட்ஸ் ஆப் கணக்குகளை தடை செய்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுக்கு இணங்கவாட்ஸ்ஆப்கணக்குகளைத் தடை செய்தது தெரியவந்துள்ளது. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட வாட்ஸ் ஆப் கணக்குகளில், சுமார் 3,506,905 கணக்குகள், பயனர்களிடமிருந்து எந்தவித புகாரும் வருவதற்கு முன்பாகவே தடைசெய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"துஷ்பிரயோகத்தைத் தடுப்பதிலும் அதை எதிர்த்து போராடும் விதமாகவும் நாங்கள் எங்கள் சேவைகளைவழங்கிவருகின்றோம். எங்கள் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு கூடுதலாக, பொறியாளர்கள், தரவு விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள்,

ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சட்ட அமலாக்கத்தில் நிபுணர்கள் அடங்கிய குழுவை நாங்கள் பயன்படுத்துகிறோம்" என்று வாட்ஸ் ஆப் நிறுவனம் தனது அக்டோபர் மாத இந்திய மாதாந்திர அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் வெளியான ஒரு அறிக்கையில் "இந்த பயனர்-பாதுகாப்பு அறிக்கையில் பெறப்பட்ட, பயனர்களின் புகார் விவரங்கள் மற்றும் வாட்ஸ்ஆப் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் எங்கள் தளத்தில் துஷ்பிரயோகத்தை எதிர்த்து போரிடும் வாட்ஸ்ஆப்பின் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளன" என்றும் வாட்ஸ்ஆப் நிறுவனம் தெரிவித்துள்ளது.



மத்திய அரசாங்கம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் குறைகள் மேல்முறையீட்டுக் குழு (GAC) பொறிமுறையை அறிமுகப்படுத்தியது, இது பயனர்கள் தங்கள் புகார்களை ஒரு புதிய போர்ட்டலில் தாக்கல் செய்வதன் மூலம் சமூக ஊடக தளங்களின் முடிவுகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய அனுமதிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், வாட்ஸ்ஆப் அதன் பயன்பாட்டின் ஆண்ட்ராய்டு பதிப்பில் மெஸேஜ் சேட்டிங் தரத்தை மறுவடிவமைப்பு செய்கிறது. பயன்பாட்டில் உள்ள சில வண்ணங்களை மாற்றுவதுடன் மேலும் ஒருசில மாற்றங்களையும் அந்நிறுவனம் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.



# விமானத்தை பார்க்காத எஸ்சி துறை நிர்வாகிகள் தொண்டர்களை விமானத்தில் டெல்லிக்கு அழைத்து சென்ற எம்.பி. ரஞ்சன்குமார்

தமிழ்நாடு காங்கிரசில் உள்ள தொண்டர்கள், நிர்வாகிகள் பலர் இன்னும் டெல்லியை பார்க்காதவர்களாகவே இருக்கிறார்கள். அதிலும் பெரும்பாலானவர்கள் விமானத்தில் கூட ஏறியது கிடையாது. இந்த நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. துறை மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன்குமார் தன் சொந்த முயற்சியில், எஸ்சி துறையில் உள்ள தொண்டர்களையும், நிர்வாகிகளையும் டெல்லிக்கு விமானத்தில் அழைத்துச் செல்ல முடிவு செய்தார். அதன்படி முதல் கட்டமாக 90 பேரை கடந்த செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி 4 நாள் பயணமாக டெல்லிக்கு விமானத்தில் அழைத்து சென்றார். அங்கு அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் குளு குளு அறையில் தங்கும் வசதி உள்பட அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளார். அவர்கள் டெல்லியில் அகில இந்திய காங்கிரஸ் எஸ்சி துறை தலைவர் ராஜேஷ்லிலோத்தியா தலைமையில், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்பட பல முக்கிய தலைவர்களை சந்தித்து உரையாடி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதன் பின் டெல்லி அக்பர் சாலையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் 2 நாட்கள் நடந்த சமூக தலைவர்கள்

மற்றும் ஆர்வலர்களின் முக்கிய கூட்டத்தில் கலந்து கொண்டனர். அடுத்த நாள் இந்தியா கேட், செங்கோட்டை மற்றும் மகாத்மா காந்தி, நேரு, அன்னை இந்திரா ராஜீவ் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களின் நினைவிடங்களையும், தாஜ்மகாலையும் சுற்றி பார்த்துவிட்டு **26**ம் தேதி மாலை சென்னைக்கு திரும்பினார்கள். டெல்லிக்கு விமானத்தில் சென்ற **90** பேருக்கு இதுதான் முதல் விமான பயணம் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தையும், தலைநகர் டெல்லியையும், தாஜ்மகாலையும் பார்த்து வியந்தனர். நாங்கள் பல ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியில் இருக்கிறோம் ஆனால் யாரும் எங்களை டெல்லிக்கு அழைத்து வந்தது இல்லை. முதல் முதலில் தலைவர் ரஞ்சன் குமார் எங்களை விமானத்தில் அழைத்து வந்து டெல்லியில் நல்ல ஓட்டலில் தங்க வைத்து, நான்கு நாட்கள் உணவு மற்றும் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். டெல்லியில் எல்லா இடங்களையும் வாகனத்தில் அழைத்துச் சென்று சுற்றி காண்பித்தார், அடுத்த முறை இன்னும் பல முக்கிய இடங்களுக்கு அழைத்து செல்வதாக கூறியுள்ளார்.

அவருக்கு நாங்கள் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதன் மூலம் சாதாரண நிர்வாகிகளும் டெல்லி மேலிடத்துடன் எளிதில் தொடர்பு கொள்ள முடியும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்சி துறை தலைவர் ரஞ்சன் குமார் நிரூபித்துள்ளார் என்று பாராட்டினார்கள்.


**அன்பார்ந்த பொது மக்களே !**

**உங்கள் பகுதியில் நடக்கும் அரசு அதிகாரிகளின் லஞ்ச லாவண்யங்கள், பாலியல் தொல்லைகள், கந்து வட்டி கொடுமைகள், ரவுடிகளின் அட்டகாசங்கள், அரசியல்வாதிகளின் அடாவடிகள், காவல்துறையினரின் அத்து மீறல்கள், பற்றி தகவல்கள் தெரிந்தால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாங்கள் வெளியிடுகிறோம்.**

**உங்களது சேவை மற்றவர்களுக்கு உதவியாக இருக்கும் .**

**விவரங்களை தெரிவிக்க**

**வாட்சப் எண் : 9884956002**

e.mail.neethidevadhai@rediffmail.com



# பத்திரிகையாளர் நலவாரியம் பொம்மை அமைப்பாக இருக்க கூடாது: நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்க வேண்டும் !

**-பா.ம.க. தலைவர் மருத்துவர் அன்புமணி அறிக்கை**

பத்திரிகையாளர் குடும்பங்களுக்கும் நலவாரியம் மூலம் வழங்கப்படும் உதவிகளை உரிய காலத்தில் விரைந்து வழங்குமாறு மருத்துவர் அன்புமணி இராமதாஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பத்திரிகையாளர் நலவாரியம் அறிவிக்கப்பட்டு, 2 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டநிலையில், எந்த நோக்கத்திற்காக அந்த வாரியம் தோற்றுவிக்கப்பட்டதோ, அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் தொடங்கப்படவில்லை. பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்திற்கான மிகச்சிறிய உதவிகள் இன்னும் ஒருவருக்குக் கூட வழங்கப்படாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

தமிழ்நாட்டில் பணிக்காலத்தில் உயிரிழக்கும் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் குடும்ப நல நிதி, ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ரூ.12,000 மாத ஓய்வூதியம் உள்ளிட்ட பல

உரிமைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர்த்து பத்திரிகையாளர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி உதவி உள்ளிட்டவை வழங்க வேண்டும் என பத்திரிகையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் பயனாக தமிழ்நாட்டில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என்று கடந்த 2021–ஆம் ஆண்டு செப்டம்பர் 6–ஆம் நாள் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2022–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டதுடன், அதன் அலுவலகமும் கலைவாணர் அரங்கில் திறக்கப்பட்டது. நல வாரியத்தின் மூலம் பத்திரிகையாளர்களில் குடும்பத்தினருக்கு கல்வி, திருமணம், மகப்பேறு உள்ளிட்ட 6 வகையான உதவித்தொகைகள் ரூ.500 முதல் ரூ.6000 வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், அறிவிப்பு வெளியாகி இரு ஆண்டுகள் நிறைவடைந்த பிறகும், எந்த நோக்கத்திற்காக பத்திரிகையாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வாரியம் அதிகாரப்பூர்வமாக அமைக்கப்பட்டு, 20 மாதங்கள் நிறைவடைந்து விட்ட நிலையில், உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டதைத் தவிர இதுவரை அந்த வாரியத்தின் சார்பில் பத்திரிகையாளர்களுக்கோ, அவர்களின் குடும்பங்களுக்கோ எந்த உதவியும் வழங்கப்படவில்லை.

பத்திரிகையாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் கூட இதுவரை இறுதி செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதுகுறித்து செய்தித்துறை உயரதிகாரிகளிடம் பத்திரிகையாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் பல முறை முறையிட்டும் கூட பயனில்லை. ஒவ்வொரு முறையும் நலவாரிய உறுப்பினர்கள் முறையிடும் போதெல்லாம் நிதித்துறையின் அனுமதி கிடைக்கவில்லை என்ற பதில் தான் கிடைப்பதாக பத்திரிகையாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது. நலத்திட்ட

உதவிகளுக்கான விண்ணப்பங்களை இறுதி செய்வதற்கு கூட நிதித்துறை அனுமதி தேவை என்பது எந்த வகையான விதிமுறை என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நலத்திட்ட உதவித்தொகை மிகவும் குறைவாகும். கல்வி உதவித் தொகையாக ரூ.1000 முதல் ரூ.6000 வரை மட்டுமே வழங்கப்படுகிறது. பள்ளி இறுதி வகுப்புக்கான உதவித் தொகையை அந்த ஆண்டில் பெற முடியவில்லை என்றால், அடுத்த ஆண்டில் அதை பெற முடியாது. கிராமப்புறங்களில் மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர் அல்லாத ஊடக நிறுவன பணியாளர்களுக்கு இந்த உதவித் தொகை பெரும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், தொடங்கப்பட்டது முதல் இன்று வரை எந்த உதவித்தொகையும் வழங்காமல் பொம்மை அமைப்பாகவே வாரியம் நீடிப்பதால் பயன் இல்லை. அனைத்து வகையான செய்திகளையும் மக்களிடம் கொண்டு செல்வதற்காக 24 மணி நேரமும் பத்திரிகையாளர்கள் பணியாற்றுகின்றனர். அதனால், அவர்களின் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக அண்மைக்காலங்களில் பல பத்திரிகையாளர்கள் இளம் வயதில் உயிரிழக்கும் நிலை ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நலவாரியம் மூலம் வழங்கப்படும் உதவிகளை உரிய காலத்தில் வழங்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழக அரசின் சார்பில் பொதுத்துறை நிறுவனத்தில் ரூ.1 கோடி வைப்பீடு செய்யப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் வட்டி நிதியைக் கொண்டுதான் நலவாரியம் மூலம் உதவிகள் வழங்கப்படுகிறது. இது எந்த வகையிலும் போதுமானது அல்ல என்பதால், வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையின் மதிப்பை ரூ.10 கோடியாக உயர்த்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். என அன்புமணி ராமதாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# காவல்துறை பற்றிய விவரம்

**தங்களது விழிப்புணர்வுக்காக.....**

தமிழ்நாடு காவல்துறை தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கை நிலை நாட்டவும், குற்றங்களைத் தடுக்கவும், தமிழ்நாடு அரசு உள்துறை அமைச்சகத்தின் கீழ், ஒரு தலைவரைக் (DGP) கொண்டு இயங்கும் அரசு சார்ந்த அமைப்பாகும். இது இந்தியாவில் ஐந்தாவது பெரிய காவல்துறை ஆகும்.

**வரலாறு**

முதன் முதலில் இது மதராசு நகரக் காவல்துறைச் சட்டம் 1888 (The Madras City Police Act 1888) க்கு உட்பட்டு துவக்கப்பட்டது.

இச்சட்டத்திற்கு ஆளுநரின் ஒப்புதல் 1888, ஏப்ரல் 12 ஆம் தேதியிலும், Governor-General -ன் ஒப்புதல் 1888, சூன் 26 ஆம் தேதியிலும் வழங்கப்பட்டது.

தொடக்கத்தில் ஒரு ஆணையாளரைக் கொண்டு உருவாக்கப்பட்ட இது சென்னை மாநகர எல்லை முழுமைக்குமாகத்தான் தன் செயல் எல்லையைக் கொண்டிருந்தது.

தமிழக காவல்துறை 1659 ஆம் ஆண்டு கட்டமைக்கப்பட்டது.

**துறை அமைப்பு,**

காவல்துறை தலைமை இயக்குநர் - திரு.மொத்த காவல் மண்டலங்கள் நான்கு,

மொத்த காவல் ஆணையரகம் ஏழு,

மொத்த காவல் மாவட்டங்கள் முப்பத்திரண்டு,

மொத்தக் காவல் நிலையங்கள் - 1452,

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்-196,

மொத்தக் காவல் பரப்பு - 1,30,058 சதுர கிலோமீட்டர்.

இந்திய காவல் பணி அலுவலர்கள்-186.

தமிழ்நாடு காவல்துறையில் மொத்தம் 88,672 பேர் பணிபுரிகிறார்கள்.

தமிழ்நாடு காவல்துறை வடக்கு, மைய, மேற்கு மற்றும்

தெற்கு என நான்கு காவல் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவை ஒவ்வொன்றும் ஒரு காவல் பொது ஆய்வாளர் *(Inspector General of Police)* தலைமையில் இயங்குகின்றன.

தமிழகத்தில் உள்ள 7 பெரிய நகரங்களான சென்னை, சென்னைப் புறநகர், மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் காவல்துறை காவல் ஆணையாளர் *(Commissioner of Police)* தலைமையில் இயங்குகின்றது.

தமிழகம் 32 காவல் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்கள் காவல் கண்காணிப்பாளர் *(Superintendent of Police)* தலைமையில் இயங்குகின்றன.

இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களுக்கு ஒரு துணை காவல் பொது ஆய்வாளர் *(Deputy Inspector General of Police)* மேற்பார்வை செய்கிறார்.

நகர்க் காவல்நிலையங்களில் காவல் ஆய்வாளர் *(Inspector)*, துணைக் காவல் ஆய்வாளர் *(Sub-Inspector)*, உதவியாளர் *(A-2)* மற்றும் காவலர்கள் *(Constables)* பணிபுரிகிறார்கள். தவிர காவலர்களில் எழுத்தர்களும் வண்டி ஓட்டுநர்களும் உள்ளனர். காவல் துறையின் பல்வேறு பிரிவுகள்

சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவு *(Law and Order)*

ஆயுதம் அல்லது தமிழ்நாடு சிறப்புப் படை *(Armed Police or Tamil Nadu Special Police)*

பொதுமக்கள் பாதுகாப்பு *(Civil Defence and Home Guards)*

பொதுமக்கள் வழங்கல் மற்றும் உளவுத்துறை *(Civil Supplies, CID)*

கடலோர காவல் துறை *(Coastal Security Group)*

குற்றப் புலனாய்வு மற்றும் உளவுத்துறை *(Crime Branch, CID)*

பொருளாதார சிறப்புப் பிரிவு *(Economic Offences Wing)*

செயல்பாடு - தமிழக ஆயுதப்படை மற்றும் ஆயுதப்படை பள்ளி *(Operations - T.N. Commando Force & Commando School)*

இரயில்வே காவல்துறை *(Railways)*

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் *(Social Justice and Human*

*Rights)*

சிறப்புப் பிரிவு - உளவு மற்றும் பாதுகாப்பு *(Special Branch , CID including Security)*

குற்றப் பிரிவு (நுண்ணறிவு) *(Co-Intelligence)*

போக்குவரத்துக் காவல் பிரிவு *(Traffic)*

மதுவிலக்கு அமல் பிரிவு *(Prohibition Enforcement Wing)*

குடிமையியல் பாதுகாப்புப் பிரிவு *(Protection and Civil Rights)*

பயிற்சிப் பிரிவு *(Training)*

**பதவி பதவிச் சின்னம்**

காவல்துறைத் தலைமை இயக்குனர் *(DGP)* அ சோ க ச் சின்னம்,அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாளும் குறுந்தடியும் அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *IPS* எழுத்து

காவல்துறைத் தலைவர் *(IGP)* ஐந்துமுனை நட்சத்திரம் ஒன்று இதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாளும் குறுந்தடியும் அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *IPS* எழுத்து

காவல்துறைத் துணைத்தலைவர் *(DIG)* அசோகச் சின்னம், அதன்கீழ் ஃ வடிவில் மூன்று நட்சத்திரங்கள், அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *IPS* எழுத்து

காவல்துறைக் கண்காணிப்பாளர் *(SP)* அசோகச் சின்னம், அதன்கீழ் ஒரு நட்சத்திரம், அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *IPS* அல்லது *TPS* எழுத்து

காவல்துறை இணைக் கண்காணிப்பாளர் *(JSP)* அசோகச் சின்னம், அதன்கீழ் ஆங்கிலத்தில் *IPS* எழுத்து

காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் *(ADSP)* அசோகச் சின்னம், அதன்கீழ் ஆங்கிலத்தில் *TPS* எழுத்து

காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் *(ASP)* மூ ன் று நட்சத்திரம் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்திருக்கும்.

அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *IPS* எழுத்து

காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் *(DSP)* மூ ன் று நட்சத்திரம் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்திருக்கும். அதற்குக் கீழ் ஆங்கிலத்தில் *TPS* எழுத்து

ஆய்வாளர் *(Inspector)* மூ ன் று நட்சத்திரம் அதற்குக் கீழ் கருநீலம், சிகப்பு ரிப்பன் அதன் கீழ் தமிழில் த.கா.துறை என்று இருக்கும்.

உதவி ஆய்வாளர் *(Sub-Inspector)* இரண்டு நட்சத்திரம் அதற்குக் கீழ் சிகப்பு ரிப்பன் அதன் கீழ் தமிழில் த.கா.துறை என்று இருக்கும்

தலைமைக் காவலர் (*Head Constable*) சட்டையின் மேற்கையில் மூன்று பட்டை ஆங்கில எழுத்து *V* வடிவில் இருக்கும்.

முதல்நிலைக் காவலர் (*PC-I*) சட்டையின் மேற்கையில் இரண்டு பட்டை ஆங்கில எழுத்து *V* வடிவில் இருக்கும்.

இரண்டாம்நிலைக் காவலர் (*PC-II*) பட்டை எதுவுமில்லை.

தமிழ்நாட்டில் காவல்துறைப் பணியிலிருப்பவர்களுக்கென்று அவர்கள் அணிந்திருக்கும் சட்டையில் அவர்கள் பணிக்கேற்ற குறியீடுகள் இடம் பெற்றிருக்கின்றன. அது குறித்த அட்டவணைதான் மேற்கண்ட அட்டவணை தங்களது கவனத்திற்காக.......

**உச்ச நீதிமன்றத்தின் ஏழு கட்டளைகள்**

**2006**-ல் உச்ச நீதிமன்றம் ஏழு கட்டளைகளை அறிவித்து அவற்றை மத்திய, மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவிட்டது.

அவைமாநிலப் பாதுகாப்பு ஆணையம் அமைத்து, அரசு காவல் துறை மீது செல்வாக்கும் நிர்ப்பந்தமும் செலுத்தாமல் பார்க்க வேண்டும்.

தலைமைப் பதவியான டி.ஜி.பி. நியமனம் வெளிப்படையானதாகவும் பதவிக் காலம் குறைந்தபட்சம் இரு வருடங்களாகவும் இருக்க வேண்டும்.

எல்லா உயர் அதிகாரிகளும், காவல் நிலைய அதிகாரிகளும் குறைந்தது இரு வருடம் பொறுப்பில் இருக்க வேண்டும்.

சட்டம் - ஒழுங்கு பொறுப்பையும் குற்றப் புலனாய்வுப் பொறுப்பையும் தனித் தனிப் பிரிவுகளாக்க வேண்டும்.

காவலர்கள் அனைவரின் நியமனம், இட மாற்றம், பதவி உயர்வு, இதர நடவடிக்கைகள் அனைத்தையும் சுயேச்சையான காவல் நிர்வாக வாரியம் அமைத்து மேற்கொள்ள வேண்டும். காவலர்கள் யார் மீதான புகார்களானாலும், அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்க மாநில, மாவட்ட அளவிலான புகார் ஆணையங்களை ஏற்படுத்த வேண்டும்.

மாநில அரசுகளைப் போலவே மத்திய அரசு கீழ் இருக்கும் காவல் பிரிவுகளுக்கும் சுயேச்சையான தேசியப் பாதுகாப்பு ஆணையம் அமைக்க வேண்டும் - இந்த ஒவ்வொரு கட்டளையையும் எப்படிச் செயல்படுத்த வேண்டும், யாரை உறுப்பினராக்க வேண்டும்

என்றும் நீதிமன்றம் ஓரளவு விரிவாகவே சொல்லியிருக்கிறது.

ஒரு வருடம் கழித்து நிலைமை என்னவென்று நீதிமன்றம் கேட்டால், பல மாநிலங்கள் பதிலே தரவில்லை. சில அரசுகள் அவகாசம் கேட்டன. சில அரசுகள் சொன்னபடி செய்துவிட்டதாக, சில அரசாணைகளை வெளியிட்டன.

நீதிமன்ற உத்தரவை அவமதித்ததற்காக குஜராத், தமிழகம், பஞ்சாப், மகாராஷ்டிரம், கர்நாடகம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநில அரசுகள் மீது மனுதாரர் பிரகாஷ் சிங் வழக்குத் தொடுத்தார். தொடர்ந்து, அரசுகள் கால அவகாசம் கேட்டன. 2008-ல் நீதிமன்றம் மாநில அரசுகள் செய்த நடவடிக்கை என்ன என்று ஆராய கண்காணிப்புக் குழுவை நியமித்தது...

(இந்தப்பதிவு என்னறிவுக்கு எட்டியவரையில் சேகரித்த தகவல்கள் ஆகும். சிறிது மாறுதல்கள் மற்றும் குறைகள் இருக்கலாம். பொருத்தருள வேண்டுகிறேன். அல்லது பிழை இருப்பின் திருத்திட உதவ வேண்டுகிறேன்.

என பரமேஸ்வரன்.சி செயலாளர் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சாலை பாதுகாப்பு சங்கம்-தமிழ்நாடு)

# தாராபுரம் அருகே குடிபோதையால் 57 வயது முதியவர் தாக்கப்பட்டார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பைபாஸில் இருந்து தாராபுரம் பிரியும் சாலையில் இரண்டு நபர்கள் குடிபோதையில், டிரைவர் 57 வயது முதியவர் என்று பாராமல் குடிபோதையில் கண் முன் தெரியாமல் அவரை தாக்கினார்கள். கல்லை விட்டு எறிந்ததால் லாரி ஒன் சைடு இடது புறம் கண்ணாடி உடைந்தது. ஒரு முறை தாக்கி பின்பு மீண்டும் 500 மீட்டர் தொலைவில் வரும் வரை ரோடு குறுக்கில் பைக்கில் நின்று அடுத்த லாரி மேல் கல் எடுத்து எறிந்து விட்டார்கள். இதைப் பார்த்து அனைவரும் அவர்களை வழிமறித்து பிடித்து காவல்துறையிடம் ஒப்படைத்தனர். இதற்கு காவல்துறை நடவடிக்கை எடுக்குமா ?



# புதுச்சேரியில் மின் கட்டணம் உயர்வு!

மின் கொள்முதல் விலை ஏற்றத்தை ஈடு செய்யும் பொருட்டு, மின்நுகர்வோரிடம் கூடுதல் கட்டணம் வசூல் செய்யப்படும் என்று புதுச்சேரி மின்துறை அறிவித்து உள்ளது.

புதுச்சேரி மின்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது :-

கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மூலம் புதுவையில் ஆண்டுதோறும் மின் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. அதன்படி ஆண்டுதோறும் உத்தேச மின் கட்டணம் அறிவிக்கப்படும். தொடர்ந்து ஒழுங்கு முறை ஆணையர் முன்னிலையில் பொதுமக்கள் கருத்து கேட்கப்பட்டு மின் கட்டணம் ஏப்ரல் மாதம் உயர்த்தப்படும்.

இதே போல் நடப்பு ஆண்டுக்கான மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் கொள்முதல் விலை உயர்வை ஈடு செய்ய புதுவை அரசின் மின்துறை கூடுதல் கட்டணம் வசூலிக்க உள்ளது. அதன்படி 2023-24ம் ஆண்டின் முதல் காலாண்டான

ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மாதங்களுக்கான மின் நுகர்வோரிடம் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. அதன் விவரம் வருமாறு:- வீடுகளுக்கு 100 யூனிட் வரை யூனிட்டுக்கு 25 பைசாவும்,101 முதல் 200 யூனிட் வரை யூனிட்டுக்கு 36 பைசாவும், 201 யூனிட் முதல் 300 யூனிட் வரை யூனிட்டுக்கு 40 பைசாவும், 300 யூனிட்டுக்கு மேல் யூனிட்டுக்கு 40 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதே போல் வர்த்தக மின் கட்டணம் 100 யூனிட் வரை யூனிட்டுக்கு 66 பைசாவும், 101 யூனிட் முதல் 250 யூனிட் வரை யூனிட்டுக்கு 77 பைசாவும், 250 யூனிட்டுக்கு மேல் 77 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதே போல் தெருவிளக்கு யூனிட்டிற்கு 78 பைசாவும், எல். டி. தொழிற்சாலை யூனிட்டிற்கு 70 பைசாவும், எல்.டி. தண்ணீர் தொட்டிக்கு யூனிட்டிற்கு 72 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது. குடிசை தொழிலுக்கு 100 யூனிட் வரை யூனிட்டிற்கு 25 பைசாவும், 101 முதல் 200 யூனிட் வரை யூனிட்டிற்கு 36 பைசாவும், 201 யூனிட் முதல் 300 யூனிட் வரை யூனிட்டிற்கு 59 பைசாவும், 300 யூனிட்டிற்கு மேல் யூனிட்டிற்கு 75 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்கு யூனிட்டிற்கு 60 பைசாவும், எச்.டி. வர்த்தகம் யூனிட்டிற்கு 62 பைசாவும், விளம்பர பலகைகளுக்கு யூனிட்டிற்கு 59 பைசா கூடுதலாக வசூலிக்கப்பட உள்ளது.

இந்த கூடுதல் கட்டணம் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்கள் வசூலிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# கர்ணன் கற்றது வித்தை அல்ல, வேதம்!

கர்ணன் பிறப்பால் சத்ரியன். வீரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும் குரு வேண்டுமே?

துரோணாச்சாரியார் மறுத்துவிட, கிருபாச்சாரியாரிடம் ஒரு நாள் அதிகாலை போகிறான் கர்ணன். மாணவர்களின் திறமையை சோதிக்க, வானத்தில் பறக்கும் ஒரு பறவையை குறிபார்த்து வீழ்த்தச் சொல்கிறார் குரு.



அர்ஜுனன் ஒரே அம்பில் பறவையை வீழ்த்திவிட்டு தேரேறிப் போய்விட்டான்.

இப்போது கர்ணனின் முறை. அம்பை நாணில் பூட்டியாயிற்று. ஒரு கணம் பறவையை வானில் குறி பார்த்தவன் வில்லையும் அம்பையும் கீழே வைத்து விட்டான்.

மிகச் சிறந்த வில் வீரனான கர்ணன் அப்படிச் செய்தது குருவுக்கு அதிசயம். காரணம் கேட்கிறார்.

குருவே இது மிகவும் அதிகாலை நேரம். இந்த நேரத்தில் ஒரு பறவை விண்ணில் பறக்கிறது என்றால் நிச்சயம் தன் குஞ்சுகளுக்கான உணவைக் கொண்டு போகிறது என்றுதான் பொருள். இப்போது திறமைக்காக அதைக் கொன்றுவிட்டால் நான் வீரனாவேன். ஆனால் அந்த இளம் குஞ்சுகள் அனாதை ஆகிவிடும். எனவே நான் கொல்ல மாட்டேன் என்றானாம்.

கலங்கிப்போன குரு சொன்னாராம், "கர்ணா நீ கற்றது வித்தை அல்ல வேதம்" என்று பாராட்டினார் !!!

பணத்தாலும், பதவியாலும், அதிகாரத்தாலும் நீங்கள் பலமானவர்களாக இருக்கலாம். அந்த பலத்தை உன்னை நேசிப்பவர்களிடமோ, அல்லது உன்னை விட பலம் குறைந்தவர்களிடமோ காட்டாதீர்கள்..

வாழ்க்கை ஒரு வட்டம். தொடங்கிய இடத்துக்கே வந்தாகனும் .

# வெள்ளாளர் வாக்குகளை குறிவைக்கிறதா ? திமுக மற்றும் பாஜக

வெள்ளாளர் வாக்குகளை குறிவைத்து திமுக செய்தவை.

*1. 2021 இந்திய சுதந்திர தினத்தின் போது டெல்லியில் வாகன அணிவகுப்பின் போது வெள்ளாளர் குலத்தில் பிறந்த சுதந்திர போராட்ட தியாகி வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் வரலாற்றை பிரதிபலிக்கும் வாகனத்தை புறக்கணித்ததாக கூறி தமிழ்நாடு முழுக்க வ.உ.சிதம்பரம் பிள்ளை வரலாற்றை பேருந்து கண்காட்சி மூலம் கொண்டு சென்றது திமுக.*

*2. வெள்ளாளரான வள்ளலாரின் பெயரில் கடலூர் பேருந்து நிலையம் அமைக்க ஆணை.*

*3. வள்ளலார் பெயரில் சர்வதேச மையம் 100 கோடி செலவில் வடலூரில் நிறுவப்படும் என்றது திமுக.*

*4. கோவை மத்திய சிறைச்சாலையில் வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு முழு உருவ வெண்கல சிலை நிறுவியது திமுக.*

*5. வெள்ளாளர் ஆதீனங்களான வைதீக சுத்த சைவ ஆதீனங்களை வைத்து அடிக்கடி விழா நடத்துகிறது திமுக அரசு.*

*6. திருநெல்வேலி, தஞ் சாவூர், திருச்சி பகுதிகளில் வெள்ளாளர்களுக்கு மாவட்ட செயலாளர் பதவி வழங்கியது திமுக.*

**வெள்ளாளர் வாக்குகளை குறிவைக்கும் பாஜக.**

*1. சென்னைக்கு வந்த பாரத பிரதமர் நரேந்திர மோடி வந்தே பாரத் இரயில் இயக்க தொடக்க விழாவில் சுதேசி இயக்கத்திற்கு முன்னோடி வெள்ளாளர் வ.உ.சிதம்பரம் பிள்ளை என்றார்.*

*2.புதிய பாராளுமன்ற திறப்பு விழாவின் போது வெள்ளாளர் ஆதீனங்களான வைதீக சுத்த சைவ ஆதீனங்களை அழைத்து செங்கோல் பெற்றார் பாரத பிரதமர் நரேந்திர மோடி. (மிக பெரிய வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வாக பார்க்கப்படுகிறது)*

*3*. வெள்ளாளர் வள்ளலார் குறித்து வீடியோ பேசி வெளியிட்டார் பிரதமர் மோடி.

*4*. வள்ளலார் குறித்து அதிக முறை பேசி வருகிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி மற்றும் பாஜக தலைவர் அண்ணாமலை.

*5* . வெள்ளாளர்களான பச்சையப்ப முதலியார், வ.உ.சி, எம்டன் செண்பகராமன் பிள்ளை, வள்ளலார், மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை, தீரன் சின்னமலை கவுண்டர், கால்வாய் வெட்டிய காலிங்கராய கவுண்டர், பொள்ளாச்சி மகாலிங்கம் கவுண்டர், தளவாய் அரியநாத முதலியார், நாயன்மார் தெய்வ சேக்கிழார் முதலியார் என வெள்ளாளர் சாதி முக்கியவர்களுக்கு புகழ் வணக்கம் செலுத்தும் விதமாக சமூக வலைதளங்களில் பதிவிட்டார் பாஜக தலைவர் அண்ணாமலை மற்றும் பாஜக முக்கிய நிர்வாகிகள்.

*6*. வ.உ.சிதம்பரம் பிள்ளை வாரிசுகளை ஆளுநர் மாளிகைக்கு அழைத்து கௌரவித்தார் ஆளுநர் ஆர். என். ரவி.

*7*. **EWS** இடஒதுக்கீடு எனும் பொருளாதார பிரிவில் நலிந்த பிரிவினருக்கான இடஒதுக்கீட்டில் பாஜக தீரமாக செயல்பட்டு தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ணிகீஷி அமல்படுத்த வைக்க வேண்டும் என வெள்ளாளர் முன்னேற்ற கழகத்தின் மாநில தலைவர் அண்ணா சரவணன் என்பவர் பாஜக தலைவர் அண்ணாமலையை சந்தித்து மனு அளித்தார்! (EWS இடஒதுக்கீட்டில் அதிகமாக பயன்பெறுவது வெள்ளாளர்களே)

*8*.வெள்ளாளர் ஆதீனமான காஞ்சிபுரம் தொண்டை மண்டல வைதீக சுத்த சைவ ஆதீனத்தில் பிரச்சனை வரும் போது அது குறித்து அறிக்கை வெளியிட்டார் பாஜக தலைவர் அண்ணாமலை.

*9*.பள்ளர்களுக்கு வழங்கிய தேவேந்திர குல வேளாளர் பாஜக மத்திய அரசு திரும்ப பெற வேண்டும் என வெள்ளாளர் முன்னேற்ற கழகம் நிர்வாகிகள் புதுக்கோட்டை, மதுரையில் கொடுத்த மனுக்களை பெற்று கொண்டார் பாஜக தலைவர் அண்ணாமலை.

*10*.வெள்ளாளர் ஆதீனமான தருமபுர ஆதீனம் பல்லக்கில் நகர்வலம் வந்து தரிசனம் நிகழ்ச்சியை தடை செய்ய, திக, கம்யூனிஸ்ட்கள், பெரியாரிஸ்ட்கள் முயன்றபோது ஆதீனத்தை பல்லக்கில் நான் தூக்கி செல்வேன் முடிந்தால்

திமுக அரசு தடுக்கட்டும் என்று ஆவேசமாக கூறி,ஆதீனத்தின் பல்லக்கையும் தூக்கி சென்றார் பாஜக தலைவர் அண்ணாமலை.

*11.* பாஜக மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் இந்துத்துவாவினர் அடிக்கடி வைதீக சுத்த சைவ ஆதீனங்களை நேரில் சந்திப்பது நடந்தேறியது.

இப்படியாக பாஜகவும், திமுகவும் போட்டி போட்டு வெள்ளாளர் வாக்குகளை குறிவைத்து செயல்படுகின்றனர்!

இதில் முன்னிலையில் இருப்பது பாஜகவினரே!

ஆனால் வெள்ளாளர்களோ (வேளாளர்) பள்ளர்களுக்கு தேவேந்திர குல வேளாளர் பெயர் வழங்க பாஜக, அதிமுக, திமுக, நாம் தமிழர் கட்சி, காங்கிரஸ் கட்சி என பல்வேறு கட்சியினரும் ஆதரவாக இருந்ததை மட்டும் மறக்காமல் உள்ளனர்.

ஒருவேளை தேவேந்திர குல வேளாளர் பெயரை நேரடியாகவோ, மறைமுகவோ திமுக மாநில அரசோ அல்லது பாஜக மத்திய அரசோ எந்த கட்சி அரசு ரத்து செய்யுமோ அந்த கட்சியின் பக்கம் மொத்தமாக திரும்புவார்கள் வெள்ளாளர்கள் (வேளாளர்கள்) என்பது மட்டும் உறுதி!

*1931* ஆம் ஆண்டு பிரிட்டிஷார் தமிழ்நாட்டில் எடுத்த சாதிவாரி கணக்கெடுப்பின் படி வன்னியர்கள் *17%*, வெள்ளாளர்கள் *15%*, பறையர்கள் *14%*, பிராமணர்கள் *3 %* , யாதவர்கள் (கோனார்) *3%* விஸ்வகர்மா (ஆசாரி) *3%*

இன்னும் சில சாதிகள் உள்ளனர்! தமிழ்நாட்டில் வெள்ளாளர் என்பவர்கள் கவுண்டர், பிள்ளை, முதலியார், வெள்ளாஞ்செட்டியார் பட்டங்களை பயன்படுத்தும் சாதிகளே.

அதே போல் *2024* பாராளுமன்ற தேர்தலில் கன்னியாக்குமரி, திருநெல்வேலி, மதுரை, மயிலாடுதுறை, திண்டுக்கல், சென்னை, வேலூர், கடலூர், தேனி, தஞ்சாவூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி என வெள்ளாளர்கள் அதிகம் வசிக்கும் தொகுதிகளில் வெள்ளாளர்களுக்கு அதிக அளவில் போட்டியிட எந்த கட்சி வாய்ப்பு வழங்குகிறதோ, அந்த கட்சியின் பக்கமும் வெள்ளாளர்கள் திரும்புவார்கள் என்பதும் திண்ணம்!

பத்திரிகையாளர்

கார்த்தி சங்கர்

# கீழானூர் ராஜேந்திரன் பிறந்தநாள் விழா



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணை தலைவர் **கீழானூர் ராஜேந்திரன்** பிறந்த தினம் கடந்த 21.9.2023 அன்று சத்தியமூர்த்தி பவனில் சிறப்பாக கொண்டாடினார்கள். அவருக்கு திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் **ஆர்.எம்.தாஸ்** ஆளுயர மாலை அணிவித்து வாழ்த்து கூறியபோது எடுத்த படம்.





# நகை வியாபாரி CJMA முத்து வெங்கட்ராம்மை கைது செய்ய வேண்டி கோவையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டத்தில் நகை வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களையும் விஸ்வகர்மா ஜாதியில் சேர்க்க வேண்டுமென்று கூறிய வேறு ஜாதியை சேர்ந்த நகை வியாபாரி CJMA முத்து வெங்கட்ராம்மை கைது செய்ய வேண்டி 04/10/2023 அன்று கோவையில் நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து விஸ்வகர்மா சமுதாய மக்கள் கலந்துக்கொண்டனர். விஸ்வகர்மா கூட்டமைப்பின் தலைவர் MP. பாண்டியன் அவர்கள் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பாரம்பரிய தச்சு தொழிலாளர்கள் நலச்சங்க செயலாளர் K.S.மோகன்குமார் அகில பாரத விஸ்வகர்மா உறவுகள் நிறுவனர் S .ஆறுமுகராஜ் சென்னை மாநகர ஐந்தொழிலாளர்கள் நலச்சங்க தலைவர் N தமிழ்அமுதன், விஸ்வகர்மா ஜன சேனா ஒருங்கிணைப்பாளர் C. சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனார்.

ஆர்பாட்டம் மூலமாக வைக்கப்பட்ட கோரிக்கைகள் :

1. விஸ்வகர்மா சமுதாயத்தில் அனைத்து சாதியினரையும், அனைத்து மதத்தினரையும் சேர்க்க வேண்டும் என்றும் அவர்கள் அனைவரையும் விஸ்வகர்மாக்கள் என்று வலியுறுத்தி வரும் தங்க நகை தயாரிப்பாளர் திரு.CJMA முத்து வெங்கட்ராம் அவர்கள் மீது சமுதாய அவமதிப்பு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

2. நாடு முழுவதிலும் உள்ள பராம்பரிய

தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் விஸ்வகர்மா யோஜனா என்ற மாபெரும் திட்டத்தை அறிவித்த பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜி அவர்களுக்கு உலகெங்கும் வாழும் விஸ்வகர்மா சமுதாயத்தின் சார்பாக நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*3.* பாரம்பரியத்தின் அடையாளமாக விளங்கும் விஸ்வகர்மா ஐந்து தொழில்களான தச்சுத் தொழில், நகை தொழில், சிற்பத் தொழில், பாத்திரம் தயாரிக்கும் தொழில், இரும்பு வேலை (கொல்லர்) செய்யும் ஐந்துதொழில் செய்பவர்களுக்கு விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் மூலம் கடன் வழங்குவதில் முன்னுரிமை வழங்கிட வேண்டும்.

*4.* மாண்புமிகு தமிழக முதல்வர் பாரம்பரியம் மிக்க குல தொழில் புரியும் விஸ்வகர்மாக்களுக்கென தனி நலவாரியம் அமைத்து தர வலியுறுத்துகின்றோம்.

*5.* தமிழக அரசு விஸ்வகர்மா தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை சிறந்த கை வினைஞர்களுக்கான விருதுகள் வழங்கி சிறப்பிக்க வேண்டுகிறோம்.

*6.* விஸ்வ பிராமணர்களை அறநிலைய துறையின் கீழ் இயங்கிவரும் ஆலயங்களில் தலா ஒரு நபரை அறங்காவலராக நியமனம் செய்ய வலியுறுத்துகின்றோம். தமிழக அரசின் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களில் சாமி தங்க நகைகளை பராமரிக்க தலா ஒரு பொற்கொல்லரையும், தேர் மற்றும் ஆலய சாமி புறப்பாடு வாகனங்கள் பராமரிக்க மர தச்சர் ஒருவரையும் நிரந்தர பணியாளராக நியமனம் செய்ய வேண்டுகிறோம்.

*7.* திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக கடந்த சட்டமன்ற தேர்தலின் போதுகொடுக்கப்பட்டவாக்குறுதியின் படி விஸ்வகர்மா சமுதாயத்திற்கு இட ஒதுக்கீட்டில் **5%** உள் ஒதுக்கீடு வழங்கிட வேண்டுகிறோம்.

*8.* தமிழகத்தில் முக்கிய மாவட்டங்களான சென்னை, கோவை, திருச்சி, சேலம், கன்னியாகுமரி விழுப்புரம், ஒசூர் போன்ற மாவட்டங்களில் தங்க நகை பூங்காக்கள், மற்றும் பர்னிச்சர் கைவினப் பொருள்கள் விற்பனைக் கூடங்கள் அமைத்து தர வேண்டுகிறோம்.

*9.* பராம்பரியம் மிக்க சிற்பக் கலையில் சிறந்து விளங்கும் விஸ்வகர்மா ஸ்பதிகளுக்கு தமிழக அரசின் உயர் விருதுகள் வழங்கி சிற்ப கலைஞர்களை ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

*10.* நலிந்து வரும் இரும்பு வேலை செய்யும் (கொல்லர்) மற்றும் பாத்திர தொழில்புரியும் (கன்னார்) தொழிலாளர்களுக்கும் தமிழக அரசு மானியத்துடன் கூடிய கடன் உதவி மற்றும் இலவச மின்சாரம் வழங்கிட வலியுறுத்துகிறோம்.

*Owner publisher & Editor C.SARAVANAN No:6/21, Namasivaya street, Old washer-menpet Chennai-600021 printed by E.Sudeeshkumar at Chennai offest printersNo.19.1,21/2 Kitabath Khan Bhadur Street, Ellie's Road Chennai-600002 www.neethidevathai.com e.mail.neethidevdhai@rediffmail.com.cell No.9884956002.*


அக்டோபர்
7
பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
எங்கள் நீதிதேவதை குழுமத்தின்
இணை ஆசிரியர்
மா.மீனாட்சிசுந்தரம்.M.A.B.Lit
அவர்களை வாழ்த்துகிறோம்


பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
அக்டோபர்
15
எங்கள் நீதிதேவதை குழுமத்தின்
நிருபர் & ஃபோட்டோ கிராஃபர்
J.சண்முகம்
அவர்களை வாழ்த்துகிறோம்

















விஸ்வகர்மா சமுதாய சங்கங்கள் சார்பாக கோவையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தின் புகைப்படங்கள்